# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 14 வெள்ளிக்கிழமை 28.06.2024 கதிர் 284







# திருட்டு கோஷ்டி விரட்டப்பட்டது என்ற 'நற்செய்தி' சுவரொட்டிகளையே மக்கள் எதிர்பார்க்கின்றனர்

## மக்களை அழைக்கிறார் 'அரகலய' புகழ் வசந்த முதலிகே

பால் சோற்றை வாயில் திணித்து மக்களின் வாயை அடைக்க அரசாங்கம் முயற்சிக்குமாயின் அதற்கு நாம் வழி விட மாட்டோம். இந்த திருட்டு கோஷ்டி விரட்டியடிக்கப்பட்டது என்பதே தற்போது மக்கள் எதிர்பார்க்கின்ற நற்செய்தியாகும். அதுமட்டுமன்றி, மக்கள் மீது சுமைகளை சுமத்துகின்ற, நம்மை கடன் வலையில் சிக்க வைக்கின்ற மற்றும் அணியும் ஆடை முதல் அனைத்தையும் உருவி விற்பனை செய்கின்ற கொள்கைகள் அனைத்தும் தோற்கடிக்கப்பட்டன என்ற செய்தியே மக்கள் எதிர்பார்க்கின்ற நற்செய்தியாகும்.

2►





# அமெரிக்கத் தூதுவருடன் மனோ குழுவினர் சந்திப்பு

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தலைமையிலான குழுவினருக்கும், மனோ கணேசன் எம்.பி. தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி மற்றும் மலையக சிவில் சமூக தூதுக்குழுவுக்கும் இடையில் காத்திரமான சந்திப்பு இன்று கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவரின் இல்லத்தில் நடைபெற்றது.

இதன்போது, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். உதயகுமார் மற்றும் த.மு.கூ.ஃஜ.ம.மு. களுத்துறை மாவட்ட அமைப்பாளர் அன்டன் ஜெயசீலன் மற்றும் சிவில் சமூகம் சார்பில் பெ.முத்துலிங்கம், பேராசிரியர் மற்றும் ம.ம.மு. பொது செயலாளர் விஜயசந்திரன், பேராசிரியர் சந்திரபோஸ், பேராசிரியர் ரமேஷ் ராமசாமி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அமெரிக்கத் தரப்பில், தூதுவருடன் அரசியல் அலுவலர் அடம் மிசெலோ, யூஎஸ்எய்ட் வேலை திட்ட முகாண்மை விசேட அலுவலர்கள் ஜனக விஜயசிறி, ரெஹானா கட்டிலன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் மனோ கணேசன் எம்.பி. ஊடகங்களுக்குத் தெரிவித்தாவது:-

"இலங்கையின் பன்னிரண்டு மாவட்டங்களில் பரந்து வாழும் மலையக மக்களை, இந்நாட்டில்

2►

# இளைஞர் ஒருவரைக் கடத்திய வழக்கில் ஹிருணிகாவுக்கு 3 வருட கடூழியச் சிறை

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு மூன்று வருட கடூழியச் சிறைத் தண்டனையை கொழும்பு மேல் நீதிமன்றம் விதித்துள்ளது.

2015ஆம் ஆண்டு கொழும்பு - தெமட்டகொடை பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் சேவையாற்றிய இளைஞர் ஒருவரைக் கறுப்பு நிறத்திலான டிபெண்டர் ரக வாகனத்தில் கடத்திச் சென்று சித்திரவதைக்கு உள்ளாக்கிய சம்பவம் தொடர்பான வழக்கில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டதை அடுத்தே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான தீர்ப்பு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமால் ரணராஜாவால் இன்று அறிவிக்கப்பட்டது.

ஹிருணிகா மீதான 18 குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன.

2►



# எமது கட்சிக்கு முதலில் ஆயுதம் வழங்கியவர்கள் ஜே.வி.பியினரே

## பிள்ளையான் கூறுகின்றார்



எமது கட்சிக்கு ஜே.வி.பி. கட்சியினரே முதன் முதலில் ஆயுதம் வழங்கினார்கள் என்று தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.

மட்டக்களப்புக்கு நேற்று வியாழக்கிழமை விஜயம் செய்த ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மட்டக்களப்பில் பிள்ளையான் மக்களை அச்சுறுத்துகின்றார் என்று தெரிவித்தமை தொடர்பாக

2►

# பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்காத அரசாங்கம் மாணவர்களின் கல்வியுடன் விளையாடுகின்றது

## வேலை நிறுத்தம் தொடரும் என்கிறது தொழிற்சங்கக் கூட்டுக் குழு

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்காமல் காலம் தாழ்த்துகின்ற அரசாங்கம் பல்கலைக்கழக மாணவர்களின் கல்வியுடன் விளையாடுவதாகவும், வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெறும் எனவும் பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டுக் குழுவின் ஊடகப் பேச்சாளர் சமன் காரியவசம் தெரிவித்தார்.

பதினேழு பல்கலைக்கழகங்களின் வேலைநிறுத்தப் போராட்டம் 58 நாட்களைக் கடந்துள்ளதாகவும், பல்கலைக்கழகங்களுக்கு முன்பாக சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு 6 நாட்களை கடந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இது தவிர பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு எதிரேயும் கடந்த 25 ஆம் திகதி முதல் சத்தியாகிரகப் போராட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் உரையாற்றிய

2►



- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## அமெரிக்கத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முழுமையான குடி உரிமை கொண்ட மக்களாக முறை மாற்றம் பெரும் நோக்கில், மலையக சிவில் சமூகத்தின் ஒத்துழைப்புடன் தமிழ் முற்போக்கு கூட்டணி, நாட்டில் அடுத்து வரும் அரசியல் மாற்றங்களை ஒட்டி வகுத்து வரும்வரை பாதை எழுத்து மூலமான ஆவணம் இன்று அமெரிக்கத் தூதுவரிடம் கையளிக்கப்பட்டது.

வாழ்வாதார காணி, வதிவிடக் காணி, கல்வி, தொழில் பயிற்சி, நில சார்பற்ற சமூக சபை ஆகிய முன்னுரிமை விடயங்கள் பற்றிய விபரங்கள் இந்த ஆவணத்தில் அடங்கியுள்ளன.

தினக்கூலி தொழிலாளர்கள், பெருந்தோட்டத் துறையில் பங்காளர்களாக முறை மாற்றம் பெறல், பெருந்தோட்ட துறையில் வாழ்கின்ற அனைத்து நிலமற்ற குடும்பங்களுக்கு வதிவிடக் காணி வழங்கள், கல்வித் துறை தொடர்பில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், தொழில் நுட்பம் ஆகிய பாடங்களுங்கான விசேட ஆசிரியர் பயிற்சி கல்லூரி அமைத்தல்,

## திருட்டு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த நற்செய்திகள் வெறுமனே வராது, அதற்காக போராட வேண்டும், எனவே அதற்காக மக்கள் போராட்ட இயக்கத்துடன் இணையுமாறு அழைக்கின்றோம். இவ்வாறு மக்கள் போராட்ட இயக்கத்தின் நிறைவேற்று உறுப்பினர் 'அரகலய' புகழ் வசந்த முதலிகே தெரிவித்தார். கொழும்பு விஜேராம மாவத்தையிலுள்ள லயன்ஸ் கழக மண்டபத்தில் மக்கள் போராட்ட இயக்கத்தின் ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றும்போது, " 'இனிய நற்செய்தி' என குறிப்பிட்டு நாடு முழுவதும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இதற்கு முன்னரும் இதே போன்ற பல சுவரொட்டிகளை நாம் கண்டுள்ளோம். ஆசியாவின் அதிசயம், சிறந்த எதிர்காலம், நூறு நாட்களில் புதிய நாடு, கருணைமிகு ஆட்சி, வளமான தரிசனம் இவ்வாறான வார்த்தை ஜாலங்களை கேட்டு கேட்டு மக்களுக்கு புளித்துப் போய்விட்டது.

70 லட்சம் மக்களுக்கு உண்ண உணவு இல்லை என்ற நற் செய்தியையே இந்த அரசு கொடுக்க முடியும். மின்கட்டணம் செலுத்த முடியாமல் 11 லட்சம் வீடுகளில் மின் துண்டிக்கப்பட்ட செய்தி, ஊட்டச்சத்து குறைபாடு 26.1 வீதம் ஆக உயர்ந்துள்ள செய்தி, உலகிலேயே குறைந்த சம்பளம் வழங்கும் நாடுகளில் இலங்கை 4வது இடத்தில் இருக்கின்ற செய்தி, பொருளாதார சிக்கல் காரணமாக 2023 ஆம் ஆண்டில் பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் வரலாற்றில் மிக அதிகமான இடைவிலகல் விகிதத்தை பதிவு செய்துள்ள செய்தி, பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் போராட்டத்தை அரசு தாக்கிய செய்தி இவைதான் ரணிலும் மொட்டு கட்சியும் எமக்கு வழங்குகின்ற இனிய நற்செய்தியாகும். எனவே, இவற்றிற்கு எதிராக மக்கள் போராட்ட இயக்கத்துடன் ஒன்றிணையுமாறு மக்களை நாம் அழைக்கின்றோம்" - என்று தெரிவித்தார். (ரென-86)

மலையகப் பெண்களுக்கான தாதியர் பயிற்சி கல்லூரி அமைத்தல் மற்றும் உலகளாவிய நாடுகளில் பரந்து வாழும் சிறுபான்மை இனத்தவர் மத்தியில் அமைய பெற்றுள்ள நில சார்பற்ற சமூக சபைகள் பற்றிய அனுபவங்களைப் பகிர்த்து கொள்ளல் ஆகியவை பற்றி கலந்துரையாடப்பட்டன.

இத்தகைய நிறுவனங்களை அமைப்பது, அவை தொடர்பான சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வது, அரசமைப்பு திருத்தங்களை மேற்கொள்வது ஆகிய பொறுப்புகளை மக்கள் ஆணையுடன் தமிழ் முற்போக்குக் கூட்டணி முன்னெடுக்கும்.

அமெரிக்கா உட்பட எமது சர்வதேச சமூக நண்பர்கள் இவற்றுக்கான தொழில்நுட்ப உதவிகள், அபிவிருத்தி உதவிகள் ஆகியவற்றை எமக்கு வழங்க முன் வர வேண்டும் என்று நாம் கோரினோம். எமது கோரிக்கைகளைச் சாதகமாகப் பரிசீலிக்க அமெரிக்கத் தூதுவர் தலைமையிலான குழுவினர் உறுதி அளித்தனர்.

மேலும், மலையக மக்கள் இலங்கையில் மிகவும் பின் தங்கிய பிரிவினாரக இருப்பதைத் தாம் ஏற்றுக்கொள்வதாகவும், அவர்களுக்கு விசேட ஒதுக்கீட்டு திட்டங்கள் தேவை என்பதைத் தாம் அறிந்துள்ளதாகவும் அமெரிக்கத் தூதுவர் தெரிவித்தார். மேலும், தற்போது, அமெரிக்க அரசின் சார்பில் மலையக மக்களின் நலவுரிமைகள் தொடர்பில் முன்னெடுக்கப்படுகின்ற வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் விளக்கிக் கூறி அது தொடர்பான எழுத்து மூலமான ஆவணம் ஒன்றையும் அவர் எமக்குக் கையளித்தார்.

எம்மிடையேயான இந்தக் கலந்துரையாடலை மென்மேலும் தொடரத் தான் விரும்புகின்றார் எனவும், மலையக மக்களுக்கு இன்னமும் உதவிடும் சந்தர்ப்பங்களை எதிர்நோக்க அமெரிக்க அரசு விரும்புகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், மலையக மக்கள் இந்நாட்டில் முழுமையான குடியுரிமை கொண்ட மக்களாக முறை மாற்றம் பெரும் நோக்கில் தமிழ் முற்போக்குக் கூட்டணியால் முன்வைக்கப்பட்ட ஆவணத்தை மேலும் செழுமைப்படுத்தி, அரசியல் பிரதிநிதிகளும், சிவில் சமூக உறுப்பினர்களும் இணைந்து சர்வ அம்சங்களும் அடங்கிய காத்திரமான அறிக்கையை அமெரிக்கத் தரப்பினரிடம் கையளிப்பது என்றும், பின்னர் அதன் அடிப்படையில் விரிவான நடவடிக்கைகளை முன்னெடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது" - என்றார். (05)

## இளைஞர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமிலபிரியங்கர அமரசிங்க என்ற இளைஞரை, தமது பாதுகாவலர்களை ஈடுபடுத்தி, கடத்திச் சென்றதுடன் அதற்கு ஆதரவு அளித்தக் குற்றச்சாட்டின் கீழ், ஹிருணிகா பிரேமச்சந்திர உள்ளிட்ட 9 பிரதிவாதிகளுக்கு எதிராக சட்டமா அதிபர் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

தங்களுக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்களை ஹிருணிகா பிரேமச்சந்திரவின் பாதுகாவலர்கள் ஒப்புக்கொண்டனர்.

முதல் கட்டத்திலேயே அவ்வாறு குற்றச்சாட்டுக்களை ஒப்புக்கொண்டதன் காரணமாக அவர்களுக்கு 12 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை உத்தரவைப் பிறப்பித்த மேல் நீதிமன்ற நீதிபதி 2 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாவை அபராதமாகச் செலுத்துமாறும் பணித்துள்ளார்.

இந்த வழக்கில் மூன்று வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இருந்து சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதன் பின்னர் அவரது கைவிரல் அடையாளம் பதிவு செய்யப்பட்டது.

அதன் பின்னர் அவர் சிறைச்சாலை அதிகாரிகளால் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அதேநேரம் இந்தத் தீர்ப்புக்கு எதிராக எதிர்வரும் திங்கட்கிழமை மேன்முறையீடு செய்யப்படும் என்று ஹிருணிகாவின் சட்டத்தரணி தெரிவித்தார்.

## எமது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியமைக்குப் பதிலளிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"அநுரகுமார திஸாநாயகக்கவின் ஜே.வி.பி. கட்சியினர்தான் முதலில் எங்களுக்கு ஆயுதம் வழங்கினார்கள். பின்பு எங்களிடம் மக்களைச் சுடுவதற்கென ஆயுதம் கேட்டார்கள்.

நான் அவர்களுக்கு ஆயுதம் கொடுக்கவில்லை. இவையெல்லாம் அந்தக் கட்சியில் வேறு ஒருவர் தலைவராக இருந்தபோது இடம்பெற்றது.

மக்களை நான் அச்சுறுத்துவதாகச் சொன்னால் மட்டக்களப்பில் அதிக வாக்குகளைப் பெற்றவர் நான். ஜனநாயகத்தைப் பற்றி கதைப்பவர்கள் பொறுப்பாக யோசித்துக் கதைக்க வேண்டும்.

நாட்டைத் தீக்குழிக்குள் தள்ளி பல்கலைக்கழக மாணவர்களை வன்முறைக்குத் தூண்டும் ஒரு கட்சி, நாட்டை அழிக்கச் செய்த ஒரு கட்சி எமது மண்ணில் இவ்வாறு கதைப்பது வேதனைக்குரிய விடயம்" - என்றார். (05)

## பல்கலைக்கழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சமன் காரியவசம் தெரிவிக்கையில், "பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களான எமக்கு மூன்று மாதங்களாக சம்பளம் கிடைக்கவில்லை. பிரச்சினைகளை தீர்க்காமல் அரசாங்கம் எங்களை பழிவாங்குகிறது. இன்னொரு புறம் பல்கலைக்கழக மாணவர்களையும் பழிவாங்குகிறார்கள். இன்று அந்த மாணவர்கள் கல்வி கற்க முடியாமல் உள்ளனர். மறுபுறம், பல் கலைக்கழகத்திற்கு அருகாமையில் உணவு, பழங்கள், பானங்கள் விற்கின்றவர்கள் மற்றும் ஃபோட்டோ பிரதி எடுக்கும் வியாபாரிகள் ஆகியோர் வியாபாரமின்றி தவிக்கின்றனர். இதற்கெல்லாம் அரசாங்கம் தான் பொறுப்புக்கூற வேண்டும்" - என்றார். (ரென-85)

## ஐ.மக்கள் சக்தியின் அமைப்பாளர்களை சஜித் பிரேமதாச கொழும்பிற்கு அழைப்பு

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஐக்கிய மக்கள் சக்தியின் அனைத்து தேர்தல் தொகுதி அமைப்பாளர்களையும் கொழும்புக்கு அழைத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த அமைப்பாளர்கள் கடந்த 24 ஆம் திகதி முதல் மாவட்ட அடிப்படையில் தனித்தனியாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு இந்த வாரம் முழுவதும் கட்டம் கட்டமாக அமைப்பாளர்கள் அழைக்கப்பட்டு பல்வேறு விழிப்புணர்வு அமர்வுகள் நடத்தப்படுகின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடக தொடர்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ரென-88)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# பொலிவியாவில் ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சி முறியடிப்பு இராணுவத் தளபதி ஜுவான் ஸுனிகா பொலிஸாரால் கைது






பொலிவியாவில் அதிபர் லூயிஸ் ஆர்சேவின் ஆட்சியைக் கவிழ்க்கும் இராணுவத்தின் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

இராணுவத் தலைமை தளபதியாக இருந்த ஜுவான் ஜோஸ் ஸுனிகா கைது செய்யப்பட்டு, அவருக்கு உதவிய விமானப் படை, கடற்படை தளபதிகளின் பதவிகளும் பறிக்கப்பட்டுள்ளன.

மத்திய தென்னமெரிக்க நாடான பொலிவியாவின் அதிபராக கடந்த 2006 முதல் 2019 ஆம் ஆண்டுவரை சோஷலிஸ இயக்கக் கட்சியைச் சேர்ந்த இவோ மொராலிஸ் ஆட்சி செலுத்திவந்தார். 2019 ஆம் ஆண்டு அதிபர் தேர்தலிலும் அவர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. எனினும், தேர்தலில் முறைகேடு நடைபெற்றதாகக் கூறி நாடு முழுவதும் மிகத் தீவிர போராட்டங்கள் நடைபெற்றன. அதையடுத்து, இவோ மொராலிஸ் தனது பதவியை ராஜிநாமாச் செய்தர்.

இந்த அரசியல் நெருக்கடியைப் பயன்படுத்தி, இராணுவத்தின் உதவியுடன் சோஷியல் ஜனநாயக இயக்கக் கட்சியின் ஜெனீன் அனெஸ் தன்னை அதிபராக அறிவித்துக்கொண்டார். தொடர்ந்து நடைபெற்று வந்த போராட்டங்களை அடக்குவதற்காக இராணுவம் மற்றும் பொலிஸார் மேற்கொள்ளும் எந்தவித நடவடிக்கைகளும் 'கிரிமினல்' குற்றமாகாது என்ற அரசாணையை அவர் வெளியிட்டது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. பின்னர் 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற அதிபர் தேர்தலில் முன்னாள் அதிபர் இவோ மொராலிஸ் கட்சியைச் சேர்ந்த லூயிஸ் ஆர்சே வெற்றி பெற்று புதிய அரசை அமைத்தார். கிளர்ச்சியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் ஜெனீன் அனெஸ் சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்தச் சூழலில், பொலிவியா இராணுவத் தலைமை தளபதி ஜுவான் ஸுனிகா கடந்த செவ்வாய்க்கிழமை அளித்த பேட்டியொன்றில், முன்னாள் அதிபர் இவோ மொராலிஸுக்கு மிரட்டல் விடுத்தமை பரபரப்பை ஏற்படுத்தியது. அந்தப் பேட்டியில், வரும் 2025 இல் நடைபெறவிருக்கும் அதிபர் தேர்தலில் மொராலிஸ் மீண்டும் போட்டியிட்டால் அவரை பாதுகாப்புப் படைகள் கைது செய்யும் என்று ஸுனிகா எச்சரித்தார். அதையடுத்து, தளபதி ஸுனிகாவை பதவியிலிருந்து வெளியேற அதிபர் லூயிஸ் ஆர்சே உத்தரவிட்டார்.

இந்த நிலையில், பொலிவியாவின் ஆட்சித் தலைநக ரான லா பாஸில், அதிபர் மாளிகை உள்ளிட்ட அரசுக் கட்டடங்கள் அமைந்துள்ள முரிலோ சதுக்கத்தை ராணுவம் புதன்கிழமை மதியம் (இலங்கை நேரப்படி வியாழக்கிழமை காலை) கைப்பற்றியது. அந்தப் பகுதியை கனரக ஆயுதங்களுடன் ஏராளமான இராணுவ வீரர்கள் சுற்றிவளைத்தனர்.

அந்தப் பகுதிக்கு நேரடியாக வந்த ஜுவான் ஸுனிகா, உள்நாட்டுத் தொலைக்காட்சிச் சேவைக்கு அளித்த பேட்டியில், அரசின் மீதான அதிருப்தியின் காரணமாக முப்படைகளின் தளபதிகளும் இங்கு வந்துள்ளோம். அமைச்சரவையிலும் ஆட்சியிலும் மாற்றம் வரும். முன்னாள் அதிபர் ஜெனீன் அனெஸ் உள்ளிட்ட அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள். இந்த ஆட்சியின் கீழ் ஒரு சில அதிகார வார்க்கத்தினர் கைகளில் நாடு செல்வதை இனியும் அனுமதிக்க முடியாது, என்று கூறினார். இதற்கிடையே, தனது அமைச்சர்களுடன் தொலைக்காட்சியில் உரையாற்றிய அதிபர் ஆர்சே, ஆட்சிக் கவிழ்ப்புக்கு எதிராக போராட்டத்தை நடத்துமாறு பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்தார். ஜனநாயகத்தையும் பொதுமக்களின் உயிரையும் பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

அதையடுத்து, முரிலோ சதுக்கத்துக்குச் செல்லும் சாலைகளில் போராட்டக்காரார்கள் குவிந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆட்சிக் கவிழ்ப்பை இராணுவம் கைவிடும் வரை காலவரையற்ற வேலை நிறுத்தம் மேற்கொள்வதாக தொழிற்சங்கங்கள் அறிவித்தன. இதனால் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி பிசுபிசுத்த நிலையில், ராணுவம், விமானப் படை, கடற்படைக்கு புதிய தளபதிகளை அதிபர் ஆர்சே அறிவித்தார். புதிய தளபதிகள் மூவரும், தங்களது படையினர் அரசு வளாகங்களிலிருந்து வெளியேறி முகாம்களுக்குத் திரும்ப உத்தரவிட்டனர். அந்த உத்தரவை ஏற்று ராணுவத்தினரும் முரிலோ சதுக்கத்திலிருந்து வெளியேறினர்.

அதையடுத்து, ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி முடிவுக்கு வந்தது. பதவி நீக்கம் செய்யப்பட்ட தளபதி ஜுவான் ஜோஸ் ஸுனிகாவை பொலிஸார் கைது செய்தனர். இந்தச் சதிச் செயலில் பங்கேற்ற அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிக்கு அமெரிக்க பிராந்திய நாடுகள் மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகள் கண்டனம் தெரிவித்திருந்தன. (04)



# இந்தியாவில் சிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்பு அதிகரிப்பு அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் பிளிங்கன் தெரிவிப்பு

இந்தியாவில் சிறுபான்மையினருக்கு எதிரான மதமாற்றச் சட்டங்கள் மற்றும் வெறுப்புப் பேச்சுகள் அதிகரித்திருப்பது கவலையளிப்பதாக அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் அன்டனி பிளிங்கன் தெரிவித்துள்ளார்.

'சர்வதேச மதச் சுதந்திரத்துக்கான ஆண்டறிக்கையை' அவர் புதன்கிழமை வெளியிட்டிருந்தார். அதில், இந்தியாவில் உள்ள 28 மாநிலங்களில் 10 மாநிலங்களில் மதமாற்றத்துக்கு எதிரான சட்டங்கள் நடைமுறையில் உள்ளன. சில மாநிலங்களில் திருமணத்துக்காக வலுக்கட்டாயமாக மதமாற்றம் செய்பவர்களுக்கு அபராதம் விதிக்கும் சட்டங்களும் இயற்றப்பட்டுள்ளன, என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், வலுக்கட்டாயமாக மதமாற்றம் செய்வதைத் தடுக்கும் சட்டத்தின்கீழ் பொய் வழக்குகள் மூலம் கிறிஸ்தவர்கள் மற்றும் இஸ்லாமியர்கள் கைது செய்யப்படுவதாகவும் சிறுபான்மையினர் புகார் கூறுகின்றனர். அதேபோல் இந்திய அரசமைப்பில் குறிப்பிட்டுள்ள பொது சிவில் சட்டத்தை அமல்படுத்துவதற்கு பிரதமர் மோடி முனைப்புக்காட்டி வருகிறார்.

ஆனால், இந்த நடவடிக்கை நாட்டை 'ஹிந்து தேசமாக' மாற்றுவதற்கான முயற்சி எனக் கூறி இஸ்லாமிய,



கிறிஸ்தவ, பழங்குடியினத் தலைவர்களும் மற்றும் சில மாநிலங்களில் உள்ள உயர் அதிகாரிகளும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். அதேசமயம், பொது சிவில் சட்டம் மூலம் பாலின சமத்துவம் மேம்படும் எனவும், பலதார திருமண முறை ஒழிக்கப்படும் எனவும் சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த முன்னெடுப்புக்கு ஆதரவு தெரிவிக்கின்றனர், எனவும் அந்த ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை தொடர்பாக அன்டனி பிளிங்கன் தெரிவிக்கையில், மதச் சுதந்திரத்தைப் பாதுகாக்க உலகளவில் பல்வேறு தரப்பினரும் தொடர்ந்து கடினமாகப் போராடி வருகின்றனர். ஆனால், இந்தியாவில் சிறுபான்மையினருக்கு எதிரான நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. மதமாற்றத்துக்கு எதிரான சட்டங்கள், வெறுப்புப் பேச்சுகள், சிறுபான்மையினரின் வழிபாட்டுத் தலங்கள் மற்றும் அவர்களின் வீடுகளை இடித்தல் போன்ற சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வருவது கவலையளிக்கிறது என்றார். இந்த அறிக்கையை வரவேற்பதாக இந்திய - அமெரிக்க முஸ்லிம் கவுன்சில் (ஐஏஎம்சி) நிர்வாக இயக்குநர் ரஷீத் அகமட் தெரிவித்தார்.

இந்தியாவில் மனித உரிமைகள் மீறல் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக அமெரிக்கா கடந்த ஆண்டு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதை இந்தியா ஏற்கெனவே நிராகரித்தது. மேலும், 'தவறான தகவல்கள் மற்றும் சரியான புரிதல் இன்மையால் இதுபோன்ற அறிக்கைகளைத் தயாரித்து சில அமெரிக்க அதிகாரிகள் வெளியிடுகின்றனர். அமெரிக்காவுடனான உறவை நாங்கள் மதிக்கிறோம். உண்மையாகவே கவனத்தில் கொள்ள வேண்டிய விவகாரங்களில் நாங்கள் வெளிப்படைத்தன்மையுடன் செயல்படுவோம்', என இந்தியா தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் பூமிக்குத் திரும்பும் திட்டம் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது!



போயிங் நிறுவனம் உருவாக்கியுள்ள விண்வெளி ஓடம் மூலம் சர்வதேச விண்வெளி நிலையத்துக்குச் சென்றுள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் பூமிக்குத் திரும்பும் திட்டம் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அமெரிக்க விண்வெளி ஆய்வு அமைப்பான நாசா அதிகாரிகள் தெரிவிக்கையில், சர்வதேச விண்வெளி நிலையத்தில் இணைக்கப்பட்டுள்ள ஸ்டார்லைனர் விண்வெளி ஓடத்தின் 5 இடங்களில் ஹீலியம் வாயு கசிவது கண்டறியப்பட்டுள்ளது. மேலும், அதன் 28 உந்து இயந்திரங்களில் 14 இல் பிரச்னை உள்ளது. எனவே, சுனிதா வில்லியம்சும் அவருடன் சர்வதேச விண்வெளி நிலையம் சென்றுள்ள பட்ச் வில்மோரும் பூமிக்குத் திரும்பும் திட்டம் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தனர்.

அமெரிக்காவின் தனியார் நிறுவனமான போயிங் உருவாக்கியுள்ள ஸ்டார் லைனர் விண்கலம், சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு நபர்களை ஏற்றிச் செல்லும் இரண்டாவது தனியார் நிறுவன விண்வெளி ஓடம் ஆகும். கடந்த மாதத் தொடக்கத்தில் அது முதல் முறையாக விண்ணில் செலுத்தப்படுவதாக இருந்தது. இருந்தாலும், அதை ஏந்திச் செல்லும் அட்லாஸ் ராக்கெட்டில் பழுது இருந்ததால் திட்டம் பல முறை ஒத்திவைக்கப்பட்டது.

இறுதியாக, சுனிதா வில்லியம்ஸ் மற்றும் மற்றொரு நாசா விஞ்ஞானியான பட்ச் வில்மோருடன் ஸ்டார் லைனர் கடந்த 5 ஆம் திகதி வெற்றிகரமாக செலுத்தப்பட்டு சர்வதேச விண்வெளி நிலையத்தை அடைந்தது. அவர்கள் இருவரும் அதே விண்கலம் மூலம் கடந்த 14 ஆம் திகதி மீண்டும் பூமி திரும்புவதாக இருந்தது.

இருந்தாலும் தொழில்நுட்பப் பிரச்சினைகள் காரணமாக அந்தத் திட்டம் ஒத்திவைக்கப்பட்டு, சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து அவர்கள் இருவரும் புதன்கிழமை (26) பூமி திரும்புவதாக இருந்தது. தற்போது அந்தத் திட்டமும் ஒத்திவைக்கப்பட்டுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (04)

## நேபாளத்தில் கனமழை ஒரு நாளில் 14 பேர் மரணம்



நேபாளத்தில் பெய்துவரும் கனமழை காரணமாக கடந்த ஒரு நாளில் 14 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து அந்த நாட்டின் தேசிய பேரிடர் மீட்புத் துறை அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

நேபாளம் முழுவதும் பெய்துவரும் கனமழை காரணமாக வெள்ளப் பெருக்கு, நிலச்சரிவு உள்ளிட்ட பேரிடர்கள் ஏற்பட்டன. இதில், கடந்த 24 மணி நேரத்தில் 14 பேர் உயிரிழந்தனர். அவர்களில் 8 பேர் நிலச்சரிவிலும் 5 பேர் மின்னல் தாக்கியும் இறந்தனர். ஒருவர் வெள்ளத்தில் மூழ்கி உயிரிழந்தார் என்றும், கனமழை காரணமாக ஏற்பட்ட சம்பவங்களில் 10 பேர் காயமடைந்ததோடு 2 பேர் காணாமல்போயுள்ளனர், என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேபாளத்தில் அண்மைக் காலமாக பெய்துவரும் பருவமழையில் வழக்கத்தைவிட அதிக உயிரிழப்புகள் ஏற்படுவதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன. (04)

# எல்பிஎல் தொடரில் புதிய விதிமுறை!

இலங்கையில் எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ள லங்கா பிரீமியர் லீக் தொடரில் "பவர் பிளாஸ்ட் ஓவர்ஸ்" என்ற புதிய நடைமுறை விதியொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

ரி-20 போட்டிகளில் முதல் 6 ஓவர்கள் பவர்பிளே ஓவர்களாக வழங்கப்படுகின்றன. இதன்போது 2 வீரர்கள் மாத்திரமே பௌண்டரி எல்லையில் களத்தடுப்பில் ஈடுபட முடியும். இதன் மூலமாக துடுப்பாட்ட வீரர்கள் பயமின்றி துடுப்பாடி ஓட்டங்களைக் குவிக்க வாய்ப்பு வழங்கப்படுகிறது.

இந்தநிலையில் இம்முறை எல்பிஎல் தொடரில் குறித்த 6 ஓவர்களை தவிர்த்து மேலும் 2 ஓவர்கள் பவர் பிளாஸ்ட் ஓவர்களாக வழங்கப்படவுள்ளன. அதன்படி இன்னிங்ஸின் 16 மற்றும் 17 ஆவது ஓவர்கள் பவர் பிளாஸ்ட் ஓவர்களாக அறிமுகம் செய்யப்படவுள்ளன.

குறித்த இந்த இரண்டு பவர் பிளாஸ்ட் ஓவர்களின் போது பௌண்டரி எல்லையில் 4 வீரர்கள் மாத்திரமே களத்தடுப்பில் ஈடுபட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய விதிமுறை தொடர்பில் கருத்து வெளியிட்ட எல்பிஎல் தொடரின் பணிப்பாளர் சமந்த தொடான்வெல, "லீக்கிற்கு மேலும் உற்சாகத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த புதுமையை கொண்டு வர முடிவு செய்தோம். இந்தப் புதிய அறிமுகம் ரசிகர்களிடையே மிகுந்த உற்சாகத்தை உருவாக்கும் என்பது உறுதி. குறித்த இந்த விதிமுறையை அணிகள் திறம்பட பயன்படுத்துவதற்கு வியூகங்களை வகுக்க வேண்டும்", என்றார்.

லங்கா பிரீமியர் லீக் தொடர் ஜூலை முதலாம் திகதி முதல் 21 ஆம் திகதிவரை பல்லேகலை, தம்புள்ள மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

(04)



# இலங்கையைப் பலமிக்க நாடாக மாற்றுவார் ரணில்!

## ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர தெரிவிப்பு



“நாட்டில் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து, ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தொடர்ச்சியாக 12 வருடங்களுக்கு ஆட்சிப் பொறுப்பை வழங்கினால் ஆசியாவிலேயே பலம் கொண்ட நாடாக இலங்கையை மாற்றுவார்” - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“ஒரு நாடு வங்குரோத்து நிலை அடைந்து விட்டால், அந்த நாடு மீண்டும் வழமைக்கு திரும்புவதற்குக் குறைந்தது 7 முதல 10 வருடங்களாவது தேவைப்படும். ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரண்டு வருடங்களுக்குள் நிலைமை தீவிரமடைந்திருந்த சந்தர்ப்பத்திலும் மக்களின் வங்கிக் கணக்குகளுக்கு 15 ஆயிரம் ஷரூபா பணத்தை வைப்பிலிட நடவடிக்கை எடுத்தார். அது மாத்திரமல்லாமல் தமது தரை, ஆகாயம் உரிமையை 30 இலட்சம் ஷரூபாவுக்குக் கொடுத்துள்ளார். அப்படியானதொரு சந்தர்ப்பத்திலேயே இந்த நாட்டை அவர் பொறுப்பேற்றுக்கொண்டார்.

எமது முன்னாள் ஜனாதிபதிகள் சகலரும் 612 வருடங்கள் இந்த நாட்டை ஆட்சி செய்திருக்கிறார்கள். ஆனால், நாட்டு மக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அந்த வாய்ப்பை வழங்கவே இல்லை. ஆனால், விதிப்படியும் இயற்கையாக ரணில் விக்கிரமசிங்கவுக்கு அந்தப் பதவி பெற்றுக்கொடுக்கப்பட்டது.

இயற்கையாகப் பெற்றுக்கொடுக்கப்பட்ட இந்த இரு வருடங்களில், முன்னாள் ஜனாதிபதிகள் 35- 40 வருடங்களில் செய்தவற்றை செய்து நிஷரூபித்திருக்கின்றார். எனவே, சிந்தித்து செயற்பட வேண்டியுள்ளது. நாடு வங்குரோத்து நிலைமையிலிருந்து விடுவிக்கப்படும் என்பதே எங்களின் நூறு சதவீத நம்பிக்கையாகும். எனவே, நாட்டை படிமுறையாக முன்னோக்கி கொண்டுச் செல்ல வேண்டியுள்ளது. மாற்று வழிகள் எதுவும் இல்லை.

இதற்கு அப்பால் மக்கள் சிந்தித்துச் செயலாற்றாவிட்டால் இலங்கை காலனித்துவமாக மாறிவிடும். அதனை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். கடனைப் பெற்றுக்கொண்டு அதனை மீள செலுத்தாவிட்டால் கடன் வழங்கியவர்கள் குறித்த சொத்துக்களைக் கைப்பற்றுவார்கள். இதுவே கடன் கொடுக்கல் - வாங்கலில் உள்ள இயல்பாகும்.

இதனைக் கருத்தில்கொண்டு, இலங்கையின் எதிர்காலத்துக்காக நாட்டின் தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பிக்கும் இந்த வேலைத்திட்டத்தின்படி, பேதங்களின்றி செயற்பட வேண்டும்.

ஆகவே, ரணில் விக்கிரமசிங்கவும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும். தேசிய பாதுகாப்புக்காக அவர் முன்னிலையாக வேண்டும். ஜனாதிபதியாக மேலும் 12 வருடங்கள் நாட்டை ஆட்சி செய்தால், இலங்கை ஆசியாவிலேயே சிறந்த நாடாக மாற்றமடையும்.

2020ஆம் ஆண்டிலிருந்து 2024ஆம் ஆண்டு வரையில் தடைப்பட்டிருக்கும் வேலைத்திட்டங்களை மீள ஆரம்பிப்பதற்கு வாய்ப்புக்கிடைக்கும். தொழிலாளர்களுக்குச் சாதகமாக அமையும்.

இலங்கை தொடர்பான சர்வதேசத்தின் நம்பிக்கை உருவாகும். இலங்கையுடனான சர்வதேசத்தின் கொடுக்கல் - வாங்கல்கள் வழமைக்குத் திரும்பும். கடன் செலுத்தாமை தொடர்பில் தற்போது வரையில் அமெரிக்காவில் மூன்று வழக்குகள் இருக்கின்றன. அந்த வழக்குகளிலும் மாற்றம் ஏற்படும். மேலும், பொருளாதார மேம்பாடு தொடர்பான சட்டமூலமும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஜூலை 2ஆம் திகதியின் பின்னர் ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் சிறப்புரை நிகழ்த்துவார். அதன் பின்னர் அந்தச் சட்டத்துக்கான அனுமதியைப் பெற்றுக்கொண்டு அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கக் கூடியதாக இருக்கும்” - என்றார். (05)

# கொழும்பு நகர எல்லையில் வாகன நிறுத்துமிடங்களில் நிகழ்கின்ற மோசடிகளை தடுப்பதற்கென சீசீடீவீ கெமராக்கள் பொருத்தப்படும்

## கொழும்பு மாநகர சபையின் போக்குவரத்துப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர்



கொழும்பு நகர எல்லையில் வாகன நிறுத்துமிடங்களில் நிகழ்கின்ற மோசடிகளை தடுக்கும் நோக்கில் அவ்விடங்களில் கெமரா கட்டமைப்புகளை பொருத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக கொழும்பு மாநகர சபையின் போக்குவரத்துப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் மஞ்சுள குலரத்ன தெரிவித்தார்.

வாகனம் நிறுத்துமிடங்களில் ரசீது வழங்காமை, வாகன உரிமையாளர்களை அவமதித்து பேசுதல், அதிக கட்டணத்தை வசூலித்தல் போன்றவற்றை தடுக்கும் வகையில் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் செயற்பாட்டின் கீழ் இந்த கெமராக்கள் பொருத்தப்படவுள்ளதாக பிரதிப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

கொழும்பு காலிமுகத்திடல் பகுதியில் ஏற்கனவே இவ்வாறு கெமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், மாநகர சபைக்குட்பட்ட மேலும் 132 வாகனத் தரிப்பிடங்களில் இவ்வாறு சீசீடீவி கெமராக்கள் பொருத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வாகன நிறுத்துமிடங்களில் வாகனங்களை நிறுத்தும் சில வாகன உரிமையாளர்கள் அதற்கு பணம் செலுத்தாமல் செல்வதாகவும் எனவே, இவ்வாறான கெமரா பொருத்துதல் மூலம் அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்ட பிரதிப் பணிப்பாளர், வாகன உரிமையாளர்களுக்கான வாகன நிறுத்தலுக்கான கட்டணத்தை செலுத்துவதற்கு வசதியாக டிஜிட்டல் தொழில்நுட்ப வசதிகள் உருவாக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (ரென-89)




# யாழில் வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் வெடிகுண்டுடன் சிக்கினார்

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் இருந்து சொகுசு கார், மோட்டார் சைக்கிள், 2 வாள்கள் மற்றும் உள்ளூர் தயாரிப்பு வெடிகுண்டு என்பவற்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

மேற்படி சந்தேகநபர் யாழ்ப்பாணத்தில் வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் மேற்கொண்டமை, வாகனங்களுக்குத் தீ வைத்தமை, நெல்லியடி பகுதியில் புடவைக் கடை ஒன்றுக்குப் பெற்றோல் குண்டு வீசியமை உள்ளிட்ட வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவரின் வன்முறைக் கும்பலைச் சேர்ந்த மேலும் 5 சந்தேகநபர்கள் தலைமறைவாகியுள்ள நிலையில் அவர்களையும் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக வீடு உடைப்புக்கள், வாகனங்களுக்குத் தீ வைத்தல் உள்ளிட்ட வன்முறைச்சம்பவங்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)

# 14 ஆண்டுகளுக்குப் பின்னர் சுதந்திரம் ஜூலியன் அசாஞ்சேக்கு விடுதலை!

விக்கிலீக்ஸ் இணையத்தள நிறுவனரும் உளவுக் குற்றச்சாட்டின் பேரில் அமெரிக்காவுக்கு நாடுகடத்தப்படுவதைத்தவிர்ப்பதற்காக பிரிட்டன் சிறையிலிருந்து பல ஆண்டுகளாகப் போராடியவருமான ஜூலியன் அசாஞ்சே விடுதலை செய்யப்பட்டு தனது சொந்த நாடான அவுஸ்திரேலியாவுக்கு புதன்கிழமை திரும்பினார்.



அமெரிக்க அரசுடன்மேற்கொண்ட ஒப்பந்தத்தின்கீழ் சுமத்தப்பட்ட உளவுக் குற்றச்சாட்டை அவர் ஒப்புக் கொண்டதால் அவரது நீண்ட காலப் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது.

அசாஞ்சேவின் விக்கிலீக்ஸ் இணையத்தளம் ஈராக் போரில் அமெரிக்க ராணுவம் மேற்கொண்ட அத்துமீறல்களை வெளிப்படுத்தும் ரகசிய வீடியோ பதிவுகளை கடந்த 2010 ஏப்ரலில் வெளியிட்டது. அத்துடன், 3.9 லட்சத்துக்கும் மேற்பட்ட அமெரிக்க ராணுவத்தின் போர் அறிக்கைகளை தனது வலைத் தளம் மூலம் அசாஞ்சே வெளியிட்டார். பின்னர் 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அவர் வெளியிட்ட தூதரக உரையாடல் பதிவுகள் உலக அளவில் அதிர்வலையை ஏற்படுத்தின.

அந்தப் பதிவுகள் மூலம் ஐ.நா. அமைப்புக்கும் பிற உலகத் தலைவர்களுக்கும் எதிராக அமெரிக்கா உளவு பார்த்தது, 'அரபு வசந்தம்' என்ற பெயரில் மேற்கு ஆசிய நாடுகளில் அரசுகளுக்கு எதிராக போராட்டங்களை அமெரிக்கா தூண்டியது போன்ற பல்வேறு ரகசியங்கள் வெளியே வந்தன.

இது போன்ற ரகசிய ஆவணக் கசிவுகள் மூலம் அமெரிக்காவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக அசாஞ்சே மீது குற்றஞ்சாட்டிய அமெரிக்க நீதித் துறையினர், உளவு பார்த்ததாக அவர் மீது 2010 இல் குற்றவியல் வழக்குப் பதிவு செய்தனர்.

இதற்கிடையே, பாலியல் வழக்கொன்று தொடர்பாக அசாஞ்சேயை லண்டன் பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்தனார். எனினும், 2012 ஆம் ஆண்டு பிணையில் வெளியே வந்த அவர் ஈக்வடோர் நாட்டுத் தூதரகத்தில் 7 ஆண்டுகளாகத் தஞ்சமடைந்திருந்தார். எனினும், கருத்து வேறுபாடு காரணமாக அவருக்கு அளித்து வந்த அடைக்கலத்தைத் திரும்பப் பெறுவதாக ஈக்வடோர் 2019ஆம் ஆண்டு அறிவித்தது. அதனைத் தொடர்ந்து, அசாஞ்சேயை லண்டன் பொலிஸார் மீண்டும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

அதன் பிறகு, உளவுக் குற்ற விசாரணையை எதிர்கொள்ள அசாஞ்சேயைத் தங்கள் நாட்டுக்கு நாடு கடத்தவேண்டும் என அமெரிக்க அதிகாரிகள் வலியுறுத்தினர். அதை எதிர்த்து அசாஞ்சேயும் சட்டப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்தார்.

இந்தச் சூழலில், அமெரிக்காவுக்கும் அசாஞ்சேவுக்கும் இடையே மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் கீழ் அவரை சிறையிலிருந்து பிரிட்டன் அதிகாரிகள் திங்கட்கிழமை விடுவித்தனர். பின்னர், அமெரிக்காவின் வடக்கு மரியானா தீவில் உள்ள மாவட்ட நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை ஆஜர்படுத்தப்பட்ட அவர், தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார். அவருக்கு, ஒப்பந்தத்தில் கூறப்பட்டதைப் போல 62 மாத சிறைத் தண்டனை மட்டுமே விதிக்கப்பட்டு, அது அசாஞ்சே ஏற்கெனவே பிரிட்டனில் அனுபவித்த சிறைத் தண்டனையிலிருந்து கழிக்கப்பட்டது. அதையடுத்து அதிகாரிகளால் விடுதலை செய்யப்பட்ட அவர், தனி விமானம் மூலம் அவுஸ்திரேலியாவை புதன்கிழமை சென்றடைந்தார்.

சுமார் 14 ஆண்டுகளுக்குப் பிறகு அவருக்கு சுதந்திரம் கிடைத்துள்ளதை மனித உரிமை, கருத்துரிமை ஆர்வலர்கள் வரவேற்றுள்ளனர'. (04)

# தம்புள்ளை அணியின் தலைவராக மொஹமட் நபி நியமனம்

இந்த வருடத்திற்கான லங்கா பிரீமியர் லீக் தொடரில் தம்புள்ளை சிக்ஸர்ஸ் அணியின் தலைவராக ஆப்கானிஸ்தான் அணியின் சகலதுறை ஆட்டக்காரரும், முன்னாள் தலைவருமான மொஹமட் நபி நியமிக்கப்பட்டுள்ளார்.




மொஹமட் நபியின் அனுபவமும், அவரின் கடந்த கால சாதனைகளும், அணித் தலைவர் பதவிக்கு அவர் தெரிவு செய்யப்பட்டமைக்கான காரணங்களாகும் என தம்புள்ளை அணி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொஹமட் நபியின் தலைமைத்துவமும் அனுபவமும் அணிக்கு சிறந்த உத்வேகத்தை வழங்கும் என தம்புள்ளை சிக்ஸர்ஸ் அணியின் உரிமையாளர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

2024 ஆம் ஆண்டிற்கான லங்கா பிரீமியர் லீக் தொடர் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளது.








## ரணில் அரசாங்கம் ஆட்சியிலிருந்து செல்வதே நற் செய்தியாக அமையும்

### டலஸ் அழகப்பெரும எம்.பி. கருத்து

ரணில் விக்கிரமசிங்ஹ அரசாங்கம் ஆட்சியிலிருந்து வீட்டுக்குச்செல்லும் என்பதே எதிர்காலத்தில் மக்களுக்கு கிடைக்கின்ற நற்செய்தியாக அமையும் என மக்கள் சுதந்திர பேரவையின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ்அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் கூற்றின்படி, இரண்டு வருடங்களாகியும் இன்னும் எமது நாடு பெற்ற கடனை திரும்பிச் செலுத்தவில்லை என்பதை காட்டுகின்றது, அதேபோல் இன்னும் நான்கு வருடங்களுக்கு கடன் திரும்பிச் செலுத்தப்பட மாட்டாது என்பதும் தெரிகின்றது எனவும் அழகப்பெரும குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற சுதந்திர மக்கள் பேரவையின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். (ரெனா-87)





## தேசிய கபடி சம்பியன்ஷிப் போட்டித் தொடர் ஆரம்பம்

விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் என்பன இணைந்து நடாத்தும்48 வது தேசிய விளையாட்டுப் போட்டியின் ஓர் அங்கமாக தேசிய கபடி சம்பியன்ஷிப் போட்டி தொடர் இன்றைய தினம் கிளிநொச்சியில் ஆரம்பமாகியுள்ளன.

குறித்த போட்டித் தொடரின் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று காலை 8 மணிக்கு கிளிநொச்சி நகர் பகுதியில் அமைந்துள்ள வட மாகாண உள்ளக விளையாட்டு அரங்கில் ஆரம்பமாகின.

இந்த போட்டியில் ஒன்பது மாகாணங்களை சேர்ந்த ஆண் மற்றும் பெண் அணிகள் பங்குபற்றுதலுடன், இன்று நாளையும் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், விளையாட்டுத்துறை அமைச்சின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ஷெமால் பெர்னாண்டோ, இரணைமடு விமானப்படை அதிகாரி கிளிநொச்சி முல்லைத்தீவு பொலிஸ் மா அதிபர் விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் விளையாட்டு அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகள், மாவட்டச் செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், விளையாட்டு பிரிவு உத்தியோகத்தர்கள், பயிற்றுவிப்பாளர்கள், போட்டியாளர்கள், மற்றும் பார்வையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (02)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.06.2024இல் வெளியிடப்பெற்றது.